

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண். 9

அறிவிப்புகள்

2019–2020

## பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

### மானியக் கோரிக்கை எண் – 9

# அறிவிப்புகள்
# 2019–2020


## சீ. வளர்மதி

பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர்

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அறிவிப்புகள் 2019–2020

## 1. விடுதிகளுக்கு மாவரைக்கும் இயந்திரங்கள், சமையல் பாத்திரங்கள், மரச்சாமான்கள் வழங்குதல்

**மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 1,074** பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளுக்கு மாவரைக்கும் இயந்திரங்களும், **1,258** விடுதிகளுக்கு சமையல் பாத்திரங்கள் மற்றும் மரச்சாமான்களும் (Furniture) **6** கோடியே **64** இலட்சத்து **30** ஆயிரம் செலவில் வழங்கப்படும்.

## 2. விடுதிகளில் சிறப்பு பழுது பார்ப்பு மற்றும் சீரமைக்கும் பணிகளுக்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தல்

அரசு கட்டடங்களில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளுக்கு பல்வேறு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வது அவசியமாகிறது. **மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** இவ்விடுதிகளில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளை, முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளும் வகையில் நடப்பாண்டிற்கு 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**3. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு தனித் திறன் வளர்க்கும் பயிற்சி மற்றும் ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சி அளித்தல்.**

**மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் **11** மற்றும் **12** ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு **1** கோடியே **70** இலட்சத்து **78** ஆயிரம் ரூபாய் செலவில் தனித்திறன் வளர்க்கும் பயிற்சி மற்றும் ஆங்கிலப் பேச்சாற்றல் வளர்க்கும் பயிற்சி அளிக்கப்படும். இதனால் **3,450** மாணவ, மாணவியர் பயன் பெறுவர்.

**4. 230 கல்லூரி விடுதிகள், 60 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகள் / உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் கள்ளர் சீரமைப்பு இணை இயக்குநர் அலுவலகம் ஆகியவற்றிற்கு அகன்ற அலை வரிசை வசதியுடன் (Broadband) BSNL தொலைபேசி இணைப்பு வழங்குதல்.**

230 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் கல்லூரி விடுதிகளுக்கும் மற்றும் 60 கள்ளர் சீரமைப்பு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் மற்றும் கள்ளர் சீரமைப்பு இணை இயக்குநர் அலுவலகத்திற்கும் அகன்ற அலை வரிசை இணைய வசதியுடன் (Broadband) BSNL தொலைபேசி இணைப்புகள் **மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 37 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

## 5. 213 கள்ளர் சீரமைப்பு தொடக்கப் பள்ளிகளில் மரத்தாலான இருவர் அமரும் வசதியுள்ள மேஜையுடன் கூடிய பெஞ்ச் வழங்குதல்.

இத்துறையின் கீழ் பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் கல்வி மேம்பாட்டிற்காக 213 கள்ளர் சீரமைப்பு தொடக்கப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இத்தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரின் நலனுக்காக 213 கள்ளர் சீரமைப்பு தொடக்கப்பள்ளிகளுக்கு **மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 4 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் மரத்தாலான இருவர் அமரும் வசதியுள்ள மேஜையுடன் கூடிய பெஞ்ச் வழங்கப்படும்.

## 6. 15 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் ஆங்கில வழி கல்வி தொடங்குதல்

2011–2012 ஆம் கல்வியாண்டில் மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் தலா 5 பள்ளிகள் வீதம் 15 அரசு கள்ளர் தொடக்கப் பள்ளிகளில் ஆங்கில வழியிலான மழலையர் வகுப்புகள் தொடங்கப்பட்டன. இப்பள்ளிகளில் தற்போது 5 ஆம் வகுப்பு வரை ஆங்கில வழி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இம்மாணவ, மாணவியர் தொடர்ந்து ஆங்கில வழி கல்வி பெறும் பொருட்டு 15 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் **மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 6 ஆம் வகுப்பில் ஆங்கில வழி கல்வி வகுப்புகள் தொடங்கப்படும்.

## 7. 23 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளுக்கு திறன்மிகு வகுப்பறைகள் (Smart Class Room) ELCOT நிறுவனம் மூலம் அமைத்தல்.

இத்துறையின் கீழ் 38 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றுள் 15 மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஏற்கனவே திறன்மிகு வகுப்பறைகள் அமைத்துத் தரப்பட்டுள்ளன. மீதமுள்ள 23 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளுக்கு **மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 1 கோடியே 5 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் செலவில் திறன்மிகு வகுப்பறைகள் (Smart Class Room) ELCOT நிறுவனம் மூலம் அமைத்துத்தரப்படும்.

## 8. 10 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வக உபகரணங்கள் வழங்குதல்.

10 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளுக்கு **மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 67 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் ஆய்வக உபகரணங்கள் வழங்கப்படும்.

## 9. 7 பள்ளி விடுதிகளை கல்லூரி விடுதிகளாக தரம் உயர்த்துதல்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ, மாணவியர் நலனுக்காக மாநிலம் முழுவதும் **1,106** பள்ளி விடுதிகள் மற்றும் **242** கல்லூரி விடுதிகள் உயர்கல்விப் பயிலும் மாணவ, மாணவியரின் நலனைக் கருத்தில் கொண்டு செயல்பட்டு வருகின்றன. 7 பள்ளி விடுதிகள் கல்லூரி விடுதிகளாக **மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** **46** இலட்சத்து **11** ஆயிரம் ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும்.

**10. அரசால் அங்கீகரிக்கப்பட்ட 39 தனியார் விடுதிகளில் தங்க அனுமதிக்கப்படும் மாணவ, மாணவியரின் பெற்றோரது ஆண்டு வருமான வரம்பினை ரூ.50,000–லிருந்து ரூ.1,00,000 ஆக உயர்த்துதல்.**

அரசால் அங்கீகரிக்கப்பட்ட 39 தனியார் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு மாதாந்திர உணவு மானியம் வழங்குவதற்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள, பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு 50 ஆயிரம் ரூபாயிலிருந்து 1 இலட்சம் ரூபாயாக **மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** உயர்த்தப்படும்.

## 11. பிற்படுத்தப்பட்டோர் இயக்ககம் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

பிற்படுத்தப்பட்டோர் இயக்ககம் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்களில் உயர் அலுவலர்களின் அறைகளை நவீனப்படுத்துதல், கூட்ட அரங்கினை புனரமைத்தல், அலுவலக வசதிகளை மேம்படுத்துதல், தடையற்ற மின்சாதன கருவி மற்றும் குளிர்சாதன கருவிகள் ஏற்படுத்தி தருதல் போன்ற பணிகள் **மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 1 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

## 12. விடுதி பணியாளர்களுக்கு பரிசுகள் வழங்குதல்

மாநில அளவில் விடுதிகளை நல்ல முறையில் பராமரிக்கும் காப்பாளர் / காப்பாளினிகளுக்கு தற்போது மாநில அளவில் முதல், இரண்டு மற்றும் மூன்றாம் பரிசாக முறையே ரூ.5,000, ரூ.3,000 மற்றும் ரூ.2,000 வழங்கப்பட்டு வருகிறது. விடுதி பணியாளர்கள் அனைவரையும் ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவில் 3 சிறந்த விடுதிகளை தேர்ந்தெடுத்து அவ்விடுதிகளில் பணியாற்றும் விடுதி பணியாளர்களான காப்பாளர் / காப்பாளினி, சமையலர், காவலர் மற்றும் ஏவலர் மற்றும் துப்புரவு பணியாளர் ஆகியோருக்கு பரிசுகள் வழங்கப்படும். முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக காப்பாளர் / காப்பாளினிகளுக்கு ரூ.20,000, ரூ.15,000 மற்றும் ரூ.10,000 காவலர் மற்றும் ஏவலர் மற்றும் சமையலருக்கு ரூ.10,000, ரூ.5,000 மற்றும் ரூ.3,000 மற்றும் துப்புரவு பணியாளருக்கு ரூ.5,000, ரூ.3,000 மற்றும் ரூ.2,000 என **மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** வழங்கப்படும். இதற்காக 1 இலட்சத்து 9 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 13. 83 கல்லூரி விடுதிகளுக்கு கட்டில்கள் வழங்குதல்

அரசு கட்டடங்களில் இயங்கி வரும் 78 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் கல்லூரி விடுதிகள் மற்றும் 3 சிறுபான்மையினர் கல்லூரி விடுதிகளுக்கு இரண்டு அடுக்கு இரும்பு கட்டில்கள் மற்றும் மலை பிரதேசங்களில் உள்ள 2 கல்லூரி விடுதிகளுக்கு மரக்கட்டில்கள் **மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 5 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

## 14. போட்டி தேர்வுகளுக்கு தயாராகும் பொருட்டு பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்துதல்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் சென்னை, கோயம்புத்தூர், சேலம், திருப்பூர், ஈரோடு, திருச்சி, மதுரை, திண்டுக்கல், தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய 11 மாநகராட்சிகளில் UPSC, TNPSC Gr.I & II, TRB, RRB, வங்கித் தேர்வு போன்ற போட்டி தேர்வுகளுக்கு தயாராகும் பொருட்டு பயிற்சி நிலையங்கள் **மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 2 கோடியே 86 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

## 15. விடுதிகள் பராமரிப்பிற்கு குழாய் சீரமைப்பாளர் மற்றும் மின்வினைஞர் பணியிடங்கள் உருவாக்குதல்

**மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** விடுதிகளில் பழுது நீக்கும் பணிகளுக்காக ஒரு மாவட்டத்திற்கு **1** குழாய் சீரமைப்பாளர் (Plumber) மற்றும் **1** மின்வினைஞர் (Electrician) பணியிடங்கள் என **31** மாவட்டங்களுக்கு **62** பணியிடங்கள் **1** கோடியே **72** இலட்சத்து **46** ஆயிரம் ரூபாய் செலவில் புதிதாக உருவாக்கப்படும்.

## 16. 18 மாணவியர் விடுதிகளுக்கும் மற்றும் 46 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கும் காவலர் மற்றும் ஏவலர் பணியிடங்கள் உருவாக்குதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 18 மாணவியர் விடுதிகளுக்கும் மற்றும் 46 கள்ளர் சீரமைப்பு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கும் தலா ஒரு காவலர் மற்றும் ஏவலர் பணியிடம் வீதம் மொத்தம் 64 பணியிடங்கள் 1 கோடியே 45 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

## 17. தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு வழங்கப்படும் ஆண்டு நிர்வாக மானியத்தினை உயர்த்துதல்.

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு வழங்கப்படும் ஆண்டு நிர்வாக மானியம் 1 கோடி ரூபாயிலிருந்து 2 கோடி ரூபாயாக 2017–2018 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டது. இந்த ஆண்டு, நிர்வாக மானியம் **மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** 2 கோடி ரூபாயிலிருந்து 2 கோடியே 50 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.

**சீ. வளர்மதி**
பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர்